OS.No.:10/2023

நாள் : 29.02.2024

வா.சா. :1

பெயர் :மலர்விழி

குறுக்கு விசாரணை ( 3 வது பிரதிவாதி தரப்பில்)

1ஆம் பிரதிவாதி என் தாயார். அவர் வழக்கு மத்தியில் இறந்து போனார். அவருக்கு வாதிகளும் 2 முதல் 4 பிரதிவாதிகளும் வாரிசுகள். முதலில் 1 முதல் 3 இலக்க சொத்துக்களுக்கு பாகம் கோரியிருந்தேன். 3 ஆம் பிரதிவாதி தரப்பில் கூடுதலாக சில சொத்துக்களை சேர்க்காததால் பகுதி பாகபிரிவினையினால் பாதிக்கப்படுகிறது என எதிர்வாதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனடிப்படையில மேலும் சில சொத்துக்கள் வழக்குரையில் சேர்க்கப்படவேண்டுமென மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதென்றால் சரிதான். அந்த உத்தரவின் மீது எங்கள் தரப்பில் மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனடிப்படையில 4 முதல் 9 இலக்கச் சொத்துக்கள் சேரக்கப்பட்டது. அவ்வாறு சேர்க்கப்பட்ட பின்னர் சார்பு நீதிமன்றத்தின் பணவரை அதிகார வரம்பு உயர்ந்துள்ளதால் இந்நீதிமன்றத்திறக்கு மாற்றப்பட்டது. அவ்வாறு சார்பு நீதிமன்றம் திருப்பிய வழக்கை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஒரு வருடத்திற்கு மேல் கால அவகாசம் எடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு காரணம் 4 முதல் 9 இலக்கச்சொத்துக்களை வழக்குரையில் சேர்த்ததால் வழக்கு நடத்தப்பட்டால் எங்களுக்கு பாதகமாக அமையும் என்ற காரணத்தினால் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நான் மாவட்ட நிதிமன்றத்தில் வழக்கை மீண்டும் தாக்கல் செய்யாமல் எங்கள் கைவசம் வைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. என் தாயார் தனியே வருமானம் ஈட்டும் வேலை எதுவும் செய்யவில்லை. வீட்டுக் குடித்தனம் தான். 4 வது இலக்கச் சொத்து என் தாயார் பெயரில் உள்ளது. அது என் தாயார் பெயரில் வாங்கப்பட்டது. அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5 வது இலக்கச் சொத்து என் தாயார் பெயரில் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதற்கான ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 6 வது இலக்க சொத்தும் என் தாயார் பெயரில் வாங்கப்பட்டது. அதற்கான ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. 7,8,9 இலக்க சொத்துக்களும் எனது தாயார் பெயரில் தான் வாங்கப்பட்டது. அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை இனிமேல் தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்ய இயலாது. வழக்கு நிலுவையில் இருக்கும்போதே என் தாயார் சில சொத்துக்களை கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கிரயம் செய்துள்ளார். 4 வது பிரதிவாதி 1வது வாதி, 5 ஆம் வாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார். பொதுவாக தாயார் மக்களுக்கு சொத்துக்களை தானம் கொடுப்பார்கள் என்றால சரிதான். கிரயம் கொடுக்கமாட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு கிரயம் கொடுத்திருந்தால் அது சந்தேகத்திற்குரியது என்றால் சரியல்ல. என் தாயாருக்கு

கடன் இருந்ததால் அவ்வாறு கிரயம் கொடுத்தார். அவ்வாறு கிரயம் கொடுத்ததாக என்னிடம் கூறினார். இந்த விவரங்களை நான் வழக்குரையை திருத்தும்போதோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். என் தாயார் பெயரில் உள்ள சொத்துக்கள் கூட்டுக்குடும்ப வருமானத்தைக்கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பதால அதை தனிப்பட்ட முறையில் கிரையம் செய்து தர என் தாயாருக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா, 4 முதல் 6 ஆவணங்களில் எனது நகைகளை விற்று கிடைத்த பணத்தை கொண்டு வாங்கப்பட்டது என்ற விவரம் அதில் காணப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.4 ல் என் பெயரில் கிரயம் பெறப்பட்ட சொத்து என்று காணப்படுகிறது என்றும் என்னால் கிரயம் பெறப்பட்ட சொத்து என்று காணப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். 4 முதல் 9 இலக்க சொத்துக்கள் என் தாயார் திருமணமாகி வந்த பின்னர் 1988, 1990 ஆண்டு வாக்கில் வாங்கப்பட்டவை என்றால் சரிதான். அவ்வாறு கிரயம் பெற்ற காலத்தில 2,3 பிரதிவாதிகளுக்கு சுமார் 30 வயது இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் வயது 58 ஆகும். பாண்டியன் என்னை விட 10 வயது மூத்தவர். சபாபதி 8 வயது மூத்தவர் என்றால் சரிதான். என் தாயார் திருமணமாகி வந்த பின்னர் சுமார் 30 முதல் 35 வருடங்களுக்கு பின்னர் 4 முதல் 9 இலக்க சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் வாங்கப்பட்ட காலத்தில் என் சகோதரிகள் சிலருக்கு திருமணமாகி இருந்தது. சிலருக்கு திருமணம் ஆகவில்லை. என் தாயார் நகைகளை வைத்து இருந்தால் அவற்றை விற்று சொத்துக்களை வாங்கி இருக்க போவதில்லை என்றும் திருமணமாகத பெண் மக்களுக்கு நகைபோட்டு திருமணம் செய்து கொடுத்திருப்பார் என்றும் சொன்னால் சரியல்ல. 4 முதல் 9 இலக்க சொத்துக்கள் தியாகராஜன் , சபாபதி, பாண்டியன் ஆகியோர் உழைப்பில் வாங்கப்பட்டவை என்றால் சரியல்ல. நான் கோருவது போல் பாகம் பிரிக்கப்பட வேண்டுமானால் 1 முதல் 9 இலக்க சொத்துக்களிலும் பாகம் பிரிக்கப்பட வேண்டுமென்றும் 1 முதல் 3 இலக்க சொத்துக்களில் மட்டும பாகம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல.